[18th September 1961

திட்டம் வகுக்கப்படுமா ? எங்கெங்கே அணைகளை கட்ட வேண்டு மென்ற திட்டம் இப்பொழுது இருக்கிறதா ? அதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டத்தை வகுப்பதில் விசேஷ கவனம் செலுத்த வேண்யடிதாக இருக்கிறது. ஒரு சில விதிகளைக் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. தண்ணீர் எந்த எந்த வகையில் எவ்வளவு கிடைக்கிறது அதை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அந்தந்த வேலைகளைப் பார்த்துத்தான் திட்டங்களை அமைக்க வேண்டியதாக இருக்கிறது. பரிசிலனை செய்து முடிவு எடுத்துக்கொண்ட பிறகுதான் அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI V. ARUNACHALA THEVAR : இந்த வருஷமாவது அந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு அணைக்கட்டு கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போர்டாரிடமிருந்து அதைப்பற்றிய அபிப்பிராயம் இன்னும் வரவில்லை. அது வந்த வுடன் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

Bifurcation of districts

* 1575 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether final decision has been taken on the proposal to bifurcate some of the larger districts in the State ; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No.

(*b*) Does not arise.

SRI M. KALYANASUNDARAM : இறுதி முடிவு எடுக்கப் படவில்லை என்று கனம் அமைச்சர் கூறினர். இது ஆலோசனையில் இருந்து வருகிறதா ? அந்தந்த மாவட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் சர்க்கார் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முதலில் திருச்சி ஜில்லாவைப் பிரித்து அங்கே தலை நகரத்தில் ஒரு கலெக்டரைப் போடுவதாக இருந்தது. பிற்பாடு தாற்காலிகமாக ஒரு டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ ஆபீசர் ஆவது ஒரு ஜில்லாவிற்குப் போடு வது என்று ஏற்பட்டது. ஆகவே தாற்காலிகமாக இப்பொழுது போட்டுவிட்டு கொஞ்சகாலம் அதைப்பற்றி பரிசீலனை செய்து விட்டு அதன் பிறகு அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும். பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.